★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 5 முஹற 4 இதழ் 251

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22—10—82

## ஒரே பார்வையில்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் அபேட்சகர்களுக்குக் கிடைத்த வாகுக்கள் -விகித சாரம் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ ஜே. ஆர். ஜெயவர்த்தன | 34,50,811 | 52.91 சத விகிதம் |
| ★ ஹெக்டர் கொப்பேகடுவ | 25,48,438 | 39.07 சத விகிதம் |
| ★ ரோஹண விஜேவீர | 2,73,428 | 4.19 சத விகிதம் |
| ★ குமார் பொன்னம்பலம் | 1,73,934 | 2.67 சத விகிதம் |
| ★ கொல்வின் ஆர். டீ சில்வா | 58,531 | .90 சத விகிதம் |
| ★ வாசுதேவா நாணயக்காரா | 17,005 | .26 சத விகிதம் |

0 முழுக்க கிடைத்த(செல்லுபடியான) வாக்குகள் 65,22,147

0 நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 85,520

# ஜயவர்த்தன அமோக வெற்றி!

# 6 ஆண்டு பதவிவகிக்க மக்கள் ஆணை பெற்றார்!

## 21 மாவட்டங்களில் ஐ தே க வெற்றியீட்டியது



(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அமோக வெற்றிபெற்றுள்ளார்!**

**இதன்மூலம் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகிக்க திரு. ஜே. ஆர். மக்கள் ஆணையைப் பெற்றுள்ளார்.**

மொத்தமாகவுள்ள இருபத்து இரண்டு மாவட்டங்களிலும ஐ. தே கட்சி, இருபத்தொரு மாவட்டங்களில் வெற்றியீட்டியுள்ளது! கொழும்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 59,814 பெரும்பாண்மை வாக்குகளால் திரு ஜயவர்த்தன வெற்றி பெற்றிருப்பது இங்கு குறிட்பிடத்தக்கது.

ஜனாதிபதி தேர்தலின் முதல் முடிவு மொனறுகலை) நேற்று அதிகாலை ஆறுமணி இருபது நிமிடமளவிலும், கடைசி முடிவு (கம்பஹா நேற்று மாலை ஐந்துமணி பத்துநிமிடமளவிலும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

### செல்லுபடியான வாக்குகள்

ஜனாதிபதி தேர்தலில் ஆறு வேட்பாளர்களுக்கும் மொத்தம் 65 லட்சதது 22ஆயிரத்து 147 செல்லுபடியான வாக்குகள் கிடைத்தன. 85,520 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இவற்றில் திரு. ஜே. ஆர். ஜயவர்தன 35,50,811 வாக்களும் 52 91 சதவீதம் திரு ஹெக்டர் கொப்பேகடுவ 25 48,438 வாக்குகளும், (39.07 சத வீதம்) பெற்றனர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரைவிட திரு. ஜயவர்த்தன ஒன்பது லட்சம்

(8-ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் முதலிடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் திரு,ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஐ.தே.க. 48, 094 வாக்குகளும், திரு. குமார் பொன்னம்பலத்திற்கு 47,095 வாக்குகளும் கிடைத்துள்ளன. திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு 21, 688 வாக்குகள் கிடைத்துள்ளன. திரு. கொல்வின் ஆர் டீ. சில்வா 1,294; திரு. வாசுதேவ நாணயக்கார 618, திரு. ரோஹண விஜேவீர 1237.

[8ம் பக்கம் பார்க்க]

## "தார்மீக சமுதாயத்தை உருவாக்குவதே இலட்சியம்"

### ஜனாதிபதி நன்றி கூறுகின்றார்

(கொழும்பு)

"சுதந்திரமான, நீதியான, தார்மீக சமுதாயத்தை உருவாக்குவதே எனது இலட்சியம். இக்குறிக்கோளை அடைய உறுதி கொண்டுள்ளேன்".

இவ்வாறு ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து கொழும்பு நகரமண்டபத்தில் செயற்பட்டு வந்த தேர்தல் முடிவு அறிவிக்கும் அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறினர்.

ஜனாதிபதி மேலும் தமது உரையில் கூறியதாவது;- "இலங்கையின் முதலாவது ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்வதற்கான தேர்தலை நல்லமுறையில் நடத்திய தேர்தல் ஆணையாளருக்கு நன்றி கூறுகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நான் போட்டியிட்டு வெற்றி பெற உதவியோருக்கும், வாக்களித்தோருக்கும் என்நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கிறேன்.

"இன்று எனக்குக் கிடைத்துள்ள இந்த வெற்றி; கடந்த ஐந்து ஆண்டு காலங்களில் எனது அரசாங்கம் கடைப் பிடித்துவந்த கொள்கைகளுக்கு மக்கள் அளித்த ஆதரவே காரணமாகின்றது உங்கள் அனைவருக்கும் மிகுந்த நன்றிகளை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

"எவ்வகையான வேறுபாடுகளும் இன்றி, சுதந்திரமான, நீதியான தார்மீக சமுதாயத்தைக் கட்டி எழுப்ப நீங்கள் தந்த 1977ம் ஆண்டின்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'சுதந்ரதின்' அலுவலகம் 'சீல்' வைக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

அவசரகாலச்சட்டத்தின் கீழ் "சுதந்திரன்" பத்திரிகைகாரியாலயம் பொலிசாரால் நேற்றுமுன்தினமிரவு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

"சுதந்திரன்" பத்திரிகை காரியாலயம் இராணுவத்தினரின் பாதுகாப்புக்குட்படுத்தப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு 10-30 மணியளவில் மேற்படி அலுவலகம் 'சீல்' வைக்கப்பட்ட போது ஊழியர்கள் எவரும் அங்கிருக்கவில்லை

## மாவட்டரீதியில் தேர்தல் முடிவுகள்

**மொனறுகலை மாவட்டம்**

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 51,264 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 44,11[illegible] |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 88[illegible] |
| வாசுதேவ நாணயகாரா | 22[illegible] |
| ரோகண விஜயவீரா | 7171 |
| குமார் பொன்னம்பலம் | 163 |
| மொத்த வாக்கு | 1,26,558 |
| செல்லுபடியானவை | 1,03811 |
| கழிவு | 1552 |

**கம்பஹா மாவட்டம்**

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 3,65,838 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 3,01,808 |
| டாக்டர் கொல்வின் ஆர். டீ சில்வா | 3,835 |
| வாசுதேவ நாணயக்கார | 1,122 |
| ரோகண விஜேவீரா | 23.701 |
| குமார் பொன்னம்பலம் | 534 |
| மொத்த வாக்கு | 7,02,830 |
| செல்லுபடி | 6,96,838 |
| கழிவு | 5,992 |

(8ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாண மாவட்டம்: குமாருக்கு கிடைத்த கூடுதல் வாக்குகள்!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் 87,263 வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.**



சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவா 77,300 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 47,780 வாக்குகளைப் பெற்று மூன்றுமிடத்தைப் பெற்றுள்ளார்

திரு. ஹெக்டர் கொப்பேகடுவாவுக்கு கோப்பாய்த் தொகுதியிலேயே கூடுதலான (13,768 வாக்குகள் கிடைத்துள்ளன. திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு, யாழ்ப்பாணத் தொகுதியிலேயே (6.490) கூடுதல் வாக்குகள் கிடைத்தள்ளன. திரு. குமார் பொன்னம்பலத்திற்கு கிளிநொச்சித்

(6ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### பயிற்ச்சி

மோட்டார் மெச்சானிக் பயிற்சி 25–10 – 82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 9/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4906

### வாடகைக்கு

உங்கள் சகலவித கொண்டாட்டங்களுக்கும் தேவையான தறப்பாள் (கன்வஸ் கூடார துணி) வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் றஞ்சித் கதிரை வாடகை நிலையம், 16 மாட்டின் லேன், யாழ்ப்பாணம். 4796

### வைத்தியம்

நாட்பட்ட மனநோய், வலி, அல்சர் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாததுடன் சிகிச்சை அளிக்கப்படும் Dr. V. T. சந்திரன், 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4899

### விற்பனைக்கு

நேரடியாக இறக்குமதி செய்த புனரமைக்கப்பெற்ற CD 125, C 90, C 70 HONDA மோட்டார் சைக்கிள்களும், DELICA வான்களும், ELF ISUZU டிரக் வண்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4857

சனி – வியாழ மாற்றம் எல்லா இராசிகளுக்கும் பூரண பலன் கொண்டவை. ரூபா இரண்டு போஸ்ரல் ஓடர் அனுப்பி பெற வேண்டிய முகவரி ஆ. சிவராசா சோதிடர் வேலணை. 4903

### தேவை

திறமையும், அனுபவமும், நேர்மையும் உள்ள விற்பனையாளர்கள் தேவை அத்துடன் மும்மொழிகளிலும் உயிற்சிபெற்ற கணக்குப்பிள்ளை தேவை. இம் மாதம் 25–10–82 க்குமுன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில வரவும். சீமாட்டி ஜவுளி சமுத்திரம், இல. 158, நவீனசந்தை, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 4891

### தேவை

ஒரு சிறிய குடும்பத்திற்கு தனி வீடு அல்லது பகுதி வீடு வாடகைக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் அல்லது அருகாமையில் தேவை கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 4889 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4889

## நவராத்திரி விழா

(தெல்லிப்பழை)

வர்த்தலை விளான் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டத்தினரின் நவராத்திரி விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது மகளிர் பாவனையாளர் தகவல்கல்வித் திட்ட மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழவிற்கு திருமதி செ. க. ரத்தினசிங்கம் தலைமை தாங்கினார்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. சி சிவமகாராசா புதிய கட்டிடத்தில் பாலர் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்.

தெல்லிப்பழை ப. நோ. சங்க பொதுமுகாமையாளர் படிப்பகத்தை திறந்து வைத்தார். திருமதி தங்சரத்தினம் தம்பித்துரை நவராத்திரி விழாவை ஆரம்பித்து வைத்தார். இக்கல்வித்திட்டத்தின் இயக்குநர் செல்வி பா. ஆறுமுகம் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். கல்வித் திட்டத்தின் செயலாளர் திருமதி குகலதி மாணிக்கவாசகர் நன்றியுரை கூறினார்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நவராத்திரி விழாவைக் கொண்டாடுகின்றனர்.

9ம் நாளான மகா நவமியன்று அம்பாளுக்கு விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெறும். விஜயதசமியன்று ஆயுத பூசை, அட்சராப்பியசம் நடைபெறும். (உ)

\+ +

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் ஞாயிற்க்கிழமை மாலை கோண்டாவில் கிழக்கு புதிய கல்வி நிலையத்தில் நவராத்திரிவிழா கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழா திரு. ப. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது இவ்விழாவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இரவு பட்டிமன்றம், இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது. [க]

# தங்கையின் காதலரை வாளினல் குத்தினராம்!

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதி

(பண்டத்தரிப்பு)

தமது தங்கையைக் காதலித்த வாலிபரை இரும்பு அலுக்கப்பயன்படுத்தப்படும் வாளினல் குத்தியதாக கூறப்படும் நபர் ஒருவரை பொலிசார் தேடி வருகின்றனர்.

மாரீசன் கூடலைச் சேர்ந்த வைத்திலிங்கம் நாகராசா என்ற நபர் வீதியால் தமது மோட்டார் சைக்கிளில்சென்று கொண்டிருந்த மனோகரன் என்பவரைவழிமறித்து இரும்பு அறுக்கப்பயன்படுத்தப்படும் வாள் ஒன்றினல் குத்திப்படுகாயப்படுத்தினராம் பலத்த காயங்களுக்குள்ளான மனோகரன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்

இச்சமபவம் பற்றி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத்தொடர்ந்து பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

காதல் தொடர்பே இத்தாக்குதல் சம்பவத்திற்கு காரணம் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. சந்தேகநபர் தலைமறைவாகிவிட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

## தூர்ந்துவிடும் அபாயநிலை

(புலோலி)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் வாசஸ்தலத்தில் மாவட்ட நீதிமன்ற ஊழியர்களால் சிரமதான முறையில் வெட்டி முடிக்கப்பட்ட கிணறு தூர்ந்துவிடும் அபாய நிலையில் உள்ளது.

இக்கிணற்றைச் சுற்றிவரக் கட்டி முடிப்பதற்கும் நீதிமன்ற ஊழியர்கள் சிரமதான முறையில் ஈடுபட ஆயத்தமாக இருந்தும் பணவசதி இல்லாமையால் அதைக் கட்டி முடிக்க முடியாமல் இருக்கின்றதாம்.

இக்கிணற்றைக்கட்டிமுடிக்க நிதி உதவி கிடைக்குமானல் இந்நீதிமன்ற ஊழியர்களின் சிரமதான நடவடிக்கைபெரும் பயனை அளிக்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

## தும்பளையில் நவராத்திரிவிழா

[புலோலி]

தும்பளை கிழக்கு இளைஞர் நன்னெறிச் கழகத்தினரின் நவராத்திரி விழா இம்மாதம் 26ம் திகதி தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி மாணவ, மாணவிகளுக்கிடையே நடாத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டி, பேச்சுப்போட்டி, சகலகலாவல்லி மாலைபாடல் போட்டி என்பனவற்றிற்கான பரிசில்களை ஆலய பிரதமகுரு ஸ்ரீதியாகராசாக் குருக்கள் வழங்குவார்.

## இடமாற்றம்

(கரவெட்டி)

நாரந்தனை பங்குத் தந்தை வண பிதா ஏ ஞானப்பிரகாசம் அடிகளார் பேசாலைக்கும் புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை வண பிதா ரெஜிஸ் ராஜநாயகம் அடிகளார் நாரந்தனைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளார்கள்

அண்மையில் புதிதாக குருப்பட்டம் பெற்ற பேசாலையைச் சேர்நத வண பிதா ஜெயபாலன் யாழ் குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார். (க)


## வெளிநாட்டில் வேலை வாய்ப்பு

பின்வரும் 100 பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(உடனடியாகத் தேவை)

(1) லிபியாவில் உள்ள ஜேர்மன் நிறுவனம்:

- ✶ எஞ்ஜினியர்ஸ்
- ✶ பிளம்பர்ஸ்
- ✶ தச்சுத் தொழிலாளர்
- ✶ அளவையாளர்கள் (Quantity Surveyors)
- ✶ சாரதிகள் (Heavy Vehicles)
- ✶ வெல்டேர்ஸ்
- ✶ மேசன்
- ✶ இயந்திரவியலாளர்
- ✶ படவரைஞர்கள் (Draftsmen)
- ✶ மெக்கானிக்ஸ் (Mechanics–Heavy)
- ✶ வேலையாட்கள்

பாஸ்போட் போட்டோஸ்ரட் பிரதி, போட்டோ, அனுபவ சான்றிதழ், நற்சான்றிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளுடனும் 150/– ரூபாவுடனும் நேரில் வரவும்.

குறிப்பு:

மேற்படி வேலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் நிச்சயமாக அனுப்பி வைக்கப்படுவார்கள்.

என். பாஸ்கரன் J. P.,

(பிரதேசசபைத் தலைவர் கரவெட்டி)

**INDRANEE AGENCY**

நெல்லியடி, கரவெட்டி.

Labour Licence No. 276. போன்: 898–கரவெட்டி

(4905)



றிக்கோ அன்பளிப்பு **இலங்கை வேந்தன்** 23 - 10 - 82 நாளை மாலை வீரசிங்கம் மண்டபம்

யாழ்நகரில் றிக்கோ வுக்கு கிளை இல்லை அசல் றிக்கோ கோப்பியை அரைத்துப்பெற்றுக் கொள்ள றிக்கோ



மீண்டும் யாழ் நகரில் துரித விற்பனையாகிறது

யப்பான் கம்பனியாரின் உன்னத தயாரிப்பிலான

**GENERAL COLOUR T. V. NIPPON ANTENNA**

(10 GY ALL CHANNEL)

**Nippon Booster (110 D B)**

மிகவும் குறைந்த விலையில் சிறந்ததை வாங்கி இன்புறுங்கள். வியாபாரிகட்கு விசேட கழிவுண்டு.

தெளிவான படத்திற்கும் திறமையான கலருக்கும் மக்களின் நன்மதிப்பை பெற்ற ஒரே மாடல விசன்

ஜெனரல் கலர் ரெலிவிசன்

விபரங்கட்கு: **றேடியோ மனுவல்** 121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24222

(4907)

# ஈரானில் கொமெய்னியின் வாரிசு டிசம்பரில் தெரிவு

## எட்டு ஆண்டுகள் ஆட்சிசெலுத்தும் அதிகாரம்

தெஹ்ரான், அக். 21

ஈரானின் மதஆட்சித் தலைவரான ஆயத்தொல்லா கொமெய்னியின் புதியவாரிசு அடுத்த மாதம் 12ம் திகதி தெரிவு செய்யப்படவுள்ளார்.

இத்தெரிவு கடந்த ஏப்ரல் மாதமே நடைபெறுவதாக இருந்தது. ஆயினும் சாதகமான சூழ்நிலை காணப்படாமையினால் டிசம்பர் மாதத்துக்கு ஒத்திப்போடப்பட்டது.

மதத் தலைவர்களை உள்ளடக்கிய முக்கியசபையொன்றே புதிய வாரிசைத் தெரிவுசெய்யவிருக்கின்றது. புதிதாகத் தெரிவுசெய்யப்படுபவர் எட்டு ஆண்டுகளுக்கு ஆட்சிசெலுத்தும் உரிமையைப் பெறுவார். இவரே ஈரானின் நீதிபதிகள் படைத்தளபதிகள் உட்பட முக்கிய அதிகாரிகளின் நியமனங்களுக்குப் பொறுப்பாகவிருப்பார்.

மன்னர் ஷாவின் வெளியேற்றத்துக்குப் பின்னர் முதல் முறையாகவே இப்புதிய தலைவர் தெரிவு எதிர்வரும் டிசம்பரில் இடம்பெறவுள்ளது. [கி[

---

வட்டு. அரசின் மருந்துச்சாலை

## கர்ப்பிணிகள் 'கிளினிக்' 'கராஜில்' நடக்கிறதாம்

### கிராமோதயசபை கண்டனம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்துச்சாலையில் கர்ப்பிணிகளுக்கான சிகிச்சை நிலையம் [கிளினிக்] இடவசதியின்மைகாரணமாக அங்குள்ள கார்கராஜ் ஒன்றில் நடாத்தப்பட்டு வருவதையிட்டு வட்டுக்கோட்டை கிராமோதய சபைக் கூட்டத்தில்பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்திலசபைத் தலைவர் சைவப்புலவர் திரு. நா. க தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையத்திற்கு என்று தனியானதொரு வசதிமிக்க கட்டிடத்தை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் வசதியற்ற கார்க்கராஜில் இந்த சிகிச்சை நிலையம் [கிளினிக்] நடைபெறுவது விரும்பத்தக்கதல்ல என்றும் யாழ். சுகாதார சேவை கண்காணிப்பாளரை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மருந்தகத்திற்கு குளிர்சாதனப் பெட்டியொன்றை தந்து உதவுமாறும், இங்கு நிலவிவரும் மருந்துத்தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வட்டுக்கோட்டை கிராமோதயசபைப் பகுதியில் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

---

ஒரு கிராமத்தின் முன்னேற்றத்துக்கு

## சத்தான உணவும், அடிப்படை ஆரோக்கியமும் அவசியம்

(மன்னார்)

'ஒரு கிராமத்தின் முன்னேற்றம் மக்களின் தேகாரோக்கியத்திலேயே தங்கியுள்ளது. சாதாரண நிலையிலுள்ள மக்களினதும், நல்லநிலையிலுள்ள மக்களினதும் உடலாரோக்கியத்துக்குச் சத்தான உணவும், அடிப்படைச் சுகாதாரமும் அவசியம் தேவை!'

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான போஷாக்குத் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பீ. எம். செபமாலை தெரிவித்தார்.

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுமண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

எமது மாவட்ட மக்கள் ஏதோ சாப்பிடுகிறோம் உயிர் வாழ்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஊட்டச்சத்து குறைவால் அவர்களுக்கு ஏற்படும் வியாதிபற்றி இப்போது தெரியாது. சிறிது காலம் சென்றபின்பே தெரியும்.

ஊட்டச்சத்து குறைவால் வியாதி ஏற்பட்ட பின் அவ்வியாதிக்கு வைத்தியம் பெறுவது மிகவும் கஷ்டம். எமது மாவட்ட மக்கள் மா சத்தையே பெருமளவில் சாப்பிடுகின்றனர் புரதச்சத்து உயிர்ச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவது மிகவும் குறைவு.

இதனாலேயே பலருக்கு சிறுவயதிலேயே வியாதிகள் ஏற்பட்டுவிடுகிறது.

பெண்கள் குழந்தை வயிற்றில் இருக்கும் போதே குழந்தைக்கான பராமரிப்பை ஆரம்பிக்கவேண்டும்.

வயிற்றிலிருக்கும் குழந்தைக்கும் தாயே உணவைகொடுக்கிறார்.

ஆதலால் கர்ப்பவதிகள் மிகவும் கவனமாகக் கூடிய சத்துள்ள உணவையே சாப்பிடவேண்டும்.

இவற்றிற்கு வசதியாக அரசாங்கம் திரிபோஷா, உயிர்ச்சத்து மாத்திரைகள் என்பனவற்றை இலவசமாக வழங்கி வருகிறது.

சிறு குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே போலியோ, அம்மைபோன்ற தடுப்பு மருந்துக்களை உரிய காலத்தில் கொடுக்கவேண்டும்.

குழந்தைகளின் வளர்ச்சி முதல் 5வருடத்திலேயே இடம்பெறுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இக்காலத்தில் குழந்தைகளுக்குப் போதிய ஊட்டச்சத்துக் கிடைக்காதுவிட்டால் எதிர்காலத்தில் அக்குழந்தையின் வாழ்க்கை ஏனையவர்களுக்கும் ஒரு பெரிய பிரச்னையாகிவிடும்.

அண்மையில் நடைபெற்ற புள்ளிவிபரப்படி மன்னார் மாவட்டத்தில் 29 வீதமனவர்கள் போதிய ஊட்டச்சத்தில்லாததால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

கிராமப்புறங்களில் கிடைக்கும் உணவுப் பொருட்களிலிருந்து சம சத்துணவைப் பெறும் வழிவகைகள் பற்றி மக்களுக்குப் பிரசாரம்செய்ய வேண்டும்.'

---

## இந்தியாவுக்கு அமோக ஆதரவு

வாஷிங்டன், அக். 21

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அணுஆயுத பாவனைகளின் கட்டுப்பாடுகுறித்து விவாதங்களை நடத்திவரும் விசேட கமிட்டிக்கு இந்தியா சமர்ப்பித்த கருத்துக்களுக்கு, சோவியத் யூனியன் அமோக ஆதரவு வழங்கியுள்ளது.

இவ்வாறு இந்தியாவின் சமர்ப்பணத்துக்கு சோவியத் ஆதரவு வழங்கியுள்ளதை சோவியத்தின் வெளிநாட்டமைச்சர் திரு. கிரொமிக்கோ அறிவித்துள்ளார். [கி]

---

## கிராமங்கள் தோறும் தமிழ்ச் சங்கங்கள்

### சர்வோதய இயக்கம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் கலை, கலாச்சாரம் பண்பாடு என்பவற்றை பாதுகாக்கவும் வளர்க்கவும் வடபகுதியில் உள்ள கிராமங்கள் தோறும் தமிழ்ச் சங்கங்களை அமைத்துச் செயற்பட சர்வோதய இயக்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது'' என்று வடபகுதி சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு புங்குடுதீவில் நடந்த சர்வோதய பரிசளிப்பு விழா கலைநிகழ்ச்சியின்போது உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

''கிராமங்கள் தோறும் தமிழ்ச் சங்கங்களை உருவாக்கி அவற்றின்மூலம் கலை, கலாச்சாரம், தமிழ் அறிவு என்பவற்றை வளர்ச்சி பெறச் செய்ய நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் தமிழினத்தின் கலாச்சாரவிஸ்தரிப்புத்திட்டத்தின்கீழ் இதைச்செயற்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கலாச்சார வளர்ச்சி பாதுகாப்புக்கென சர்வதேச நாடுகள் வழங்கும்நிதியைப்பெற்று இத்திட்டத்தை செயற்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

[வண்.நிரு]

---

## இந்தியாவில் சூறுவளிக்கு பதினெட்டுபேர் பலி

சென்னை, அக். 21

ஆந்திராபிரதேசத்தில் வீசிய சூறுவளிக் காற்றுக்கு 18 பேர் பலியாகியுள்ளனர் 50,000க்கு மதிகமானோர் வீடுகளை இழந்துள்ளனர்,

நெல்லூர் மாவட்டத்திலும் சூறுவளிச்சேதம் கணிசமானளவு ஏற்பட்டுள்ளது. இங்கு உயிர்ச்சேதம் சிறிதளவே ஏற்பட்டுள்ளது.

மீட்புவேலைகளும், நிவாரணப் பணிகளும், மும்முரமாக இப்பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. [கி]

---

## மரம் நாட்டு வைபவம்.

[வவனியா]

உலக உணவுத் தினத்தை முன்னிட்டு வவனியாமாவட்ட பாடசாலைகளில் மரம் நாட்டு வைபவம் நடைபெற்றது.

---

## பனம்விதை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தார். கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், இந்துபுரம் ஆகிய பகுதியிலுள்ளவர்களுக்கு பனம் விதைகளை இலவசமாக விநியோகிக்கிறார்கள்.

---

## சதாத்சகோதரரின் மனைவிகள்

### பிள்ளைகள் சொத்துக்களுக்கு தடை!

கெய்ரோ, அக். 21

முன்னாள் எகிப்திய ஜனாதிபதியான ஜனாப் அன்வர் சதாத்தின் சகோதரரான இஸ்மத்சதாத்தின் நான்கு மனைவிமாரினதும், 15 பிள்ளைகளினதும் சொத்துக்கள்மீது அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

இஸ்மத்சதாத்தின் வர்த்தக அலுவல்களில் ஊழல்கள் நிலவியிருப்பதாக குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு கொன்றினையடுத்தே இத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளன

முன்னாள் எகிப்திய அதிபர் அன்வர் சதாத் கடந்த ஆண்டில் தமது சகோதரரான கிஸ்மத் சதாத்துக்கு, அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையடுத்து வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொள்ளத்தடைவிதித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

**English Classes**
AT
**D. R. E. C.**
2nd Floor, Maniam Building,
15, Sirambiady Lane, Jaffna.
(Near Sridhar Theatre)

**A Three Month Basic English Course**
WITH EMPHASIS ON SPEECH AND STRUCTURE
COMMENCING SATURDAY 30th OCTOBER
Lecturer : Mr. R. KANTHIAH
Rtd. Hd Eng. Dept.,
Palaly Teachers' College.
Time : 9-30—11-00 a m
(Saturdays and Sundays)
*Fees Rs. 40/-
Course Materials provided free

**A Three Month Intermediate Course in Spoken English and Speech**
(THEORY AND PRACTICE)
for Teacher Trainees and Students of English
Lecturer : Mr. N. THEVAPALASINGHAM (EnTee)
Rtd. Lecturer in Speech and Methodology
Time : 2-00—4-00 p m.
(Saturday)
5-00—6-00 p.m.
(Monday)
*Fees: Rs. 40/-
Course Materials provided free.
Contact : Mr. C. VAMADEVA
Office Assistant,
**D. R. E. C.**

### மணிவாக்கு

எவனாவது முதல்வனாயிருக்கவிரும்பினால் அவன் எல்லோருக்கும் கடைசியானவனாய் எவருக்கும் தொண்டனாய் இருப்பானாக.

— பைபிள்

# நமது நோக்கு

## மக்கள் தீர்ப்பு

மக்களால் முதன் முதல் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இன்று ஜனாதிபதியாகவிருக்கும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே என்ற முடிவு நாம் இதுவரை கிடைத்த உத்தியோ பூர்வமான அறிவித்தலின் படி தெளிவாகிறது.

நாட்டின் மிகப்பொறுப்பு வாய்ந்த நிறைவேற்றும் அதிகாரம் படைத்த ஜனாதிபதி அவர்களை நாம் வாழ்த்துகின்றோம். அவருடைய ஆட்சி மக்கள் இறைமையைப்பேணிபொதுமக்களின் நல்வாழ்வுக்கு வழிகோல வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு கிடைத்த மகத்தான வெற்றி அவர் இன்றைய ஆட்சியில் செயற்படுத்திய ஜனாதிபதி ஆட்சிச் சென்றுகொள்வது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது.

நாமிந்தப் பத்திரிகையில் வற்புறுத்திய கருத்து இது பற்றியே! இந்த ஆட்சி முறைக்கு தெளிவான ஆதரவிருப்பதை நாமெந்த வகையிலும் மறுக்கமுடியாது.

கட்சி அடிப்படையைப் பெரிதாகக் கருதாமல் ஒரு ஜனாதிபதிக்குரிய விசேட அதிகாரங்களைச் சுட்டிக்காட்டி, இன்றைய ஆட்சியின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி ஆட்சி சர்வாதிகார ஆட்சியாக மாறும் அபாயம் உண்டாவென்பதைத் தேர்தல் தெளிவுபடுத்த வேண்டுமெனக் கோரினோம்.

இல்லை என்பதே மக்களின் தீர்ப்பு. பழைய பாராளுமன்ற ஆட்சியை நாம் விரும்பியபோதும், மக்கள் ஜனாதிபதி ஆட்சிக்கு சார்பாக வாக்களித்தது எமக்கு எவ்விதத்திலும் வியப்பல்ல. காரணம்; நாமே இன்றைய ஜனாதிபதியின் நிர்வாகத் திறமையை ஒப்புக்கொண்டு இனிமேல் ஜனாதிபதியாக வருகிறவர் வேறொருவராக இருந்தால் நிலைமை வேறுபடலாமென விளக்கியிருந்தோம்.

இந்த நுணுக்கமானகருத்துக்கள் பொதுமக்களின் ஆராய்வுக்கு வரவதில்லை. இன்றைய ஜனாதிபதியின் சேவையில் நம்பிக்கை கொண்டவர்கள் இந்த ஆட்சிமுறைக்கு ஆதரவளிப்பது இயல்பே.

தேர்தல் பல கருத்துக்களை விமர்சிக்க உதவிய போதும் எமக்கு அதிமுக்கியமனது, ஆளுங்கட்சிக்கு நியாயமான எதிர்ப்பிருப்பது, சிறப்பாக தமிழ்மக்களின் எதிர்ப்பு.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கடந்த ஐந்து வருட 'அல்லோலகல்லோல' நிலைக்கு இன்றைய தேர்தல் தேசிய ரீதியில் அதன் பலம் குறையவில்லை என்பது புலப்படுகின்றது

தோல்வியடைந்த காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த, ஐ. தே. கட்சித் தலைவர் திரு. ஜே ஆர். ஜயவர்த்தனாவைப்போல், சுதந்திரக் கட்சியைக் கட்டி எழுப்பும் நிலை இக்கட்சிக்கிருக்கவில்லை; அதுமட்டுமல்ல ஒரு கட்சி நான்காகப் பிரிந்து தெறிகெட்டிருந்த போதும்; சடுதியான அகில இலங்கைத் தேர்தல் ஒன்றில் இவ்வளவு ஆதரவைப் பெற்றிருப்பது கட்சியின் மூலபலம் கடுமையாகப் பாதிக்கப்படவில்லையென்பது

ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகைமைகள் எல்லாம் இன்றைய சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கில்லை என்பதை அவரே சொல்லியிருந்தார். திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடும் நிலைமை வேறுபட்டதென்பதை நாம் விளக்கத்தேவையில்லை.

வருகிற பொதுத்தேர்தலில பலமுடைய எதிர்க்கட்சி இருக்கவேண்டுமென்பதை நாம் பெரிதும் விரும்புகின்றோம்; இன்றைய தேர்தல் அந்த நம்பிக்கைக்குச் சாதகமாகவே இருக்கிறது.

இலங்கை மக்கள் இன்றைய வாக்களிப்பில் தாம் அரசியல் குழந்தைகள் அல்லவென்பதை நிரூபித்திருக்கிறார்கள். ஆளுங்கட்சியை நிராகரிக்க நியாயமில்லையென்பதும், ஜனாதிபதி ஆட்சியை இன்றைய ஜனாதிபதி துஷ்பிரயோகஞ்செய்யவில்லையென்பதும் தென்னிலங்கை மக்களின் தெளிவான தீர்ப்பு.

அதேசமயம், ஜனாதிபதி தேர்தலில் ஒரேஒரு தமிழ் வேட்பாளர் திரு ஜீ. ஜீ, பொன்னம்பலத்துக்குகிடைத்த தமிழ்மக்கள் அளித்த அமோக ஆதரவும், சுதந்திரக்கட்சிக்கு வடக்கிலும் கிழக்கிலும் கிடைத்த பேராதரவும், ஆட்சிக்கு எதிரான வாக்களிப்பு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

முழுநாட்டுக்கும் ஜனாதிபதியாகும் ஒருவர், ஒரு பெரும் இனத்தின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் விடுவது ஜனநாயக ஆட்சிக்கு பெரும் இழுக்கென்பதை நாம்விபரிக்கத்தேவையில்லை.

தமிழ்மகனென்று தமிழ் மக்கள் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலத்துக்கு அளித்த ஆதரவு அரசாங்கம் சிங்கள மயம் என்று தமிழ்மக்கள் கொள்வதை தெளிவாகக் காட்டுகின்றது; அதேசமயம் பெயரையே செவ்வனே புரிந்து சொல்லமுடியாத திரு. கொப்பெக்கடுவவுக்குக்கிடைத்த தமிழ் வாக்குகள் பற்றி நாம் விமர்சிக்கத்தேவையில்லை.

தமிழர் பிரச்னை இருந்தவாறிருக்கின்றது; விடிவு காணும்நாள் கிட்டவேண்டுமென்பதே எமது பெரு விருப்பம்.

எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் பொலிசார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டியதற்கு எமது பாராட்டுக்கள்.

### பிரிவுபசாரம்

[சுழிபுரம்]

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய கலாநிதி எஸ் செல்வராசா மேற்படிப்புக்காக லண்டன் பயணமாகவுள்ளார். இவரது சேவையைக் கௌரவித்து பிரிவுபசாரம் ஒன்று வைத்தியசாலைப் பகுதியினரால் அளிக்கப்பட்டது.

# அன்னை வடிவமடா!

மகாகவி பாரதியார் சுயசரிதை என்றே ஒன்று பாடியிருக்கிறார். கனவு, பாரதி அறுபத்தாறு என்னும் இரு பிரிவுகளாக இருக்கின்றது. அது சரஸ்வதி காதல், லக்ஷ்மி காதல், காளி காதல் என்று மூன்று பகுதிகளிளாகப்பாரதியார் கவிதை பாடியுள்ளார். முப்பெரும் சக்திகளிடம்காதல் கொண்டதாக அவர் பாடினாலும் அவருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் இருக்கின்றன.

''பிள்ளைப்பிராயத்திலே கலைமகளின் பெண்மையைக்கண்டு மயங்கிவிட்டேன். அவர் உருவம் கண்டு வெள்ளை மனது பறிகொடுத்தேன். நான் அவளைத் தேடிப்போனால் விழிக்கோணத்திலே நகை காட்டிச் செல்வாள் கடைசியில்ஆற்றங்கரையிலே கன்னிக் கவிதை கொணர்ந்துதந்தாள். என்னோடு இணங்கி மணம்

### "புத்தொளி"

புரிவாய் என்றேன். அவள் புன்னகை பூதது மறைத்து விட்டாள் கலைதேவியின் மீது விருப்பம் வளர்த்துபித்துப் பிடித்தது போல் இருந்தேன். இருபத்திரண்டு வயது வரையில் இந்தப் பண்மகள் காதலைப்பற்றி நின்றேன்'' என்று சரஸ்வதி காதலைப்பற்றிப் பாடுகின்றார்.

#### லக்ஷ்மி காதல்

செல்வம் வேண்டும் என்ற ஆசை பாரதியாருக்கு உண்டாயிற்று சிறிது பொருள் கிடைக்கும், அதனால் சில நேரம் மகிழ்ச்சியடைவார். செருக்கும் உண்டாகும். திடீரென்று வறுமைவந்து சூழும் சில சில இடங்களில செல்வம் சிறந்து நிற்கக்கண்டு மகிழ்வார். வீரரிடத்தில் வீரத்திருவும் வேந்தரிடத்தில் வெற்றித்திருவும் இருப்பதைக் கண்டு வியந்து நிற்பார்,

இதைப்பாரதியார் காட்சியாகக்காட்டுகிறார். இந்த நிலையினிலே அங்கோர் இன்பப் பொழிலினிடை யில் வேறொரு சுந்தரிவந்து நின்றாள் அவள் அழகைக்கண்டு சிந்தைபறிகொடுத்தேன். அவள்செந்திரு என்றுபெயர் சொன்னாள். அது முதல் அவளைத் தழுவவேண்டுகிறேன். புன்னகை செய்வாள் அன்றைப்போது முழுதும் மகிழ்ந்திருப்பேன். பின்பு என்னைப்புறக்கணித்து ஏகிடுவாள் அப்போது உளம் மிக நொசந்திடும் காட்டுவழியிலும்மலைக் காட்சியிலும், வேட்டுவர் சார்பிலும், வீரரிடத்திலும் வேந்தரிடத்திலும் அவள் வருவாள். கண்டவித்தையிலே இன்பம் மிகுதியாகும் என்று பாடுகிறார்.

#### காளி காதல்

பராசக்தியாகிய அன்னையைப் பாரதி வழிபட்டார். தெய்வமாக வழிபட்டார். அவள் அருளால் செல்வமும் அறிவும் வளரும் என்று நம்பி அவளைத் தொழுதார் இதையும் அவர் கவிதை ஆக்கினார். பின் ஓர் இரவில் கரியபெண் அழகி ஒருத்தி வந்தாள், சற்றே அருகிற்சென்று பார்த்தேன். அன்னைவடிவம் அவள். இவள் ஆதிபராசக்தி, தேவி அவள் இன்னருள் வேண்டும். பின் யாவும் உலகில் வசப்பட்டுப் போமடா!'' இவ்வாறு பாடுகிறார்.

இந்தக் கவிதையில் பாரதியாருடைய சிறந்த பக்திநிலை புலப்படுகின்றது. புதுமையும் பழமையும் இணைந்த நிற்கின்றன. அவர் எத்தனையோ புதிய முறைகளை மேற்கொண்டார். ஆண்டவனை நாயகனாக வைத்துப் பாடுவது பழைய மரபு. அந்தமரபுப் படியே கண்ணன் என் காதலன் என்று பாடினார். ஆனால் புதுமையாக ஒன்றும் செய்தார். ஆண்டவனை நாயகியாக்கித் தம்மைக் காதலனுக்கிப் பாடினார். கண்ணன் பாரதியாருக்குக் கண்ணம்மாவாக இருந்து கவிதை யுலகில் காதல் விளையாட்டைக் காட்டினான். இது ஒரு வகையில் புரட்சி என்றே கூறவேண்டும். பெண்தெய்வங்களுக்குத் தம்மைக் காதலனுக்கிப் பாடுவது துணிச்சலான பெரிய புரட்சி. அது ஒருதலைக் காமமாக இருந்தாலும் அப்படிப் பாட எவலோரும் துணிய மாட்டார்கள்.

பாரதியார் துணிந்தார். சரஸ்வதிமேல் காதல்கொண்டதாகப்பாடினார். காதல் அன்று ஆத்மார்த்த காதல். இது உவறு அன்று என்று சமாதானம் கூறலாம்.

நாடி அருகணைந்தால்—பல
ஞானங்கள் சொல்லி
இனிமை செய்வாய் இன்று
கூடி மகிழ்வம் என்றால்—
விழிக்
கோணத்திலே நகை
காட்டிச்செல்வாள்
அம்மா!
ஏற்று மனமகிழ்ந்தே—அடி
என்னோடிணங்கி மணம்
புரிவாயென்று
போற்றிய போதினிலே
என்று பாடுகிறார்.

திருமகள் காதலிலும் இப்படியே வருகிறது.

அந்தத் தின முதலா –
நெஞ்சம்
ஆரத் தழுவிட
வேண்டுகின்றேன் அம்மா!
முன்னின்று பார்த்திடுவாள்–
அந்த
மோகத்திலே தலைசுற்றிடுங்
காண்

என்பவை சொல்லளவில் தழுவ ஆசைப்படும் மோகத்தைக் காட்டுகின்றன.

பின்னோர் இரவினிலே–கரும்
பெண்மை அழகொன்று
வந்தது கண்முன்பு
கன்னி வடிவமென்றே – களி
கண்டுசற்றேயருகிற்சென்று
பார்க்கையில்.

புரட்சிக் கவிஞரான பாரதியார் மறைந்து பராசக்தி பக்தர் பிரமித்துப் பாடுகிறார்.

கன்னி வடிவமென்றே –
களி
கண்டு சற்றேஅருகிற்சென்று
பார்க்கையில்
அன்னை வடிவம் அடா! –
இவள்
இன்னருள் வேண்டுமடா –
பின்னர்
யாதும் உலகில் வசப்பட்டுப்
போமடா

ஆவேசம் வந்தவர் போல எத்தனை 'அடா' போட்டுப் பாடுகிறார். கன்னி வடிவம் காதலியாகமாறவில்லை. அன்னை வடிவம் என்ற உண்மையைத் தோற்றுவித்தது. இங்கே மணம் செய்வதோ ஆரத்தழுவுவதோ வார்த்தைக்குக் கூட

# கொக்குவி…
# அம்பா…

கொக்குவில்—நந்…
கற்புலத்து மனோன்…

வரக்கூடாது. இ…
வேண்டிப் பணியும் …
அல்லவா அவள்?

ஒரு பாடல் முழுவது…
மையின் பெருமையா…
டைய இதய வீணை பா…
செல்வங்கள் பொங்…

தெள்ளளி வெய்தி ந…
சா…
அல்லும் பகலும் இ…

அத்தனை கோடிப்
பொருளினுள் …
வில்லை அசைப்பவ…

வேலை அனைத்தையு…
செய்யும் வினை…
தொல்லை தவிர்ப்ப…

தோத்திரம் பாடித்
தொழுதிடு வே…
காதல் என்று எப்…
ஆரம்பித்தது அம்…
வந்தவுடன் தோத்திரப்…
தொழும் செயலாகிவி…
முதல் இரண்டு பாட…
புரட்சிக் கவி நடை…
டார். மூன்றுவது கா…
அவர் தோற்றார்.
கவிஞரானார். ''அன்னை…
மடா!'' என்ற உ…
வெடிக்கும் அடியிலே
காண்கின்றோம்.

9 விருத்திகரமான ஆயுட் திட்டங்கள்

## ...வில் மனோன்மணி ...ள் ஆலயவிழா

...ந்தாவில் ...ன்மணி ஆல

...இன்னருளை ...ம் பராசக்தி ...வதும் அம் ...யாக அவரு ...பாடுகிறது. ...ாங்கிவரும்— ...நல்ல ...தி நலம்பல ...சார்ந்திடும் ...இங்கே — ...இவை ...ளேநின்று ...வளை — ...இந்த ...தயும் ...ணைச்சியைத் ...பவளை — ...நித்தம் ...வோமடா! ...எப்படியோ ...ம்மையிடம் ...ரம் பாடித் ...கிவிட்டது. ...ாடல்களில் ...போட் ...காட்சியில் ...பக்திக் ...ன்னை வடிவ ...உணர்ச்சி ...ல இதைக்

யம் மிகவும் பழைய ஒரு ஆலயமாகும். 1982-ம் ஆண்டு ஆரம்பத்தில் பெரும் பொருட் செலவில் கட்டப்பட்ட இராஜ கோபுரக் கும்பாபிஷேகம நடந்தது. அதைத் தொடர்ந்து அம்பாள் ஆலயத்தையும், கணபதி, முருகன், வைரவர் கோயில்களையும் புனரமைக்க அடியார்கள் விரும்பி பாலஸ்தாபனம் செய்தார்கள். மிகவும் அலங்காரமான முறையில் ஜீர்ணோத்தாரணம் எல்லாம் நடந்தது மகாகும்பாபிஷேகம் 3-9-82 வெள்ளிக்கிழமை நடந்தது. அதைத் தொடர்ந்து 45 நாட்கள் தினமும் அபிஷேகங்களும் இடைக்கிடை சங்காபிஷேகங்களும் நடைபெற்று, மஹாகும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்திவிழா 17-10-82 ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

மேற்படி ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ கா. முத்துக்குமாரசாமிக் குருக்கள் தலைமையில் சிவாகம கிரியா சிரோரத்தினம் பிரம்மஸ்ரீ கு. இராமநாதக்குருக்களின் முகாமையில் பல குருக்கள்மாருடன் காலை 8 மணிக்குக் கிரியைகள் ஆரம்பித்தன. அம்பாளுக்கு 1008 சங்குகளும், ஏனைய பரிவார மூர்த்திகள் ஒவ்வொன்றுக்கும் 108 சங்குகளுமாக வைக்கப்பட்டு, மிகச் சிறந்த முறையில் யாகங்களும், மந்திர உச்சாடனங்களும் செய்யப்பட்டு மேளவாத்தியங்கள், சங்கு, மணி ஓசைகளுடனும் வேத கோஷங்களும் அரோகரா ஒலியும் முழங்கவும் சங்காபிஷேகம் சிறப்பாக நடந்தது. வசந்த மண்டபவதில் கணபதி, வள்ளி தேசேனாசமேத முருகன் இருமருங்கிலும் வீற்றிருக்க எழுந்தருளி மனோன்மணி அம்பாளுக்கு விசேட பூஜைகளும், நவசக்தி அர்ச்சனைகளும் செய்யப்பட்டன. பின் அழகிய வாகனங்களில் சுவாமிகள் வீதிவலம்வந்து அடியார்களுக்குக் காட்சியளித்தனர். அடியார்களுக்கு அன்னதானம் மகேஸ்வர மண்டபத்தில் நடந்தது.

பிற்பகல் 6 மணியளவில் நவராத்திரி பூஜையுடன்விழா ஆரம்பித்தது ஆலயபரிபாலன சபைத்தலைவரும் இளைப்பாறிய அதிபருமான திரு. இ. கந்தையா தலைமையில் கும்பாபிஷேகமலர் வெளியிடப்பட்டது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியல் அதிகாரியும் ஆலய தர்மகர்த்தாக்களுள் சிரேஷ்டருமான சட்டத்தரணி திரு. சி, அருளம்பலம் மலரை அறிமுகப்படுத்தினார். யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் திரு, சி, சின்னத்துரை முதல் பிரதியைபெறுவதாகஇருந்தும் வர முடியாமையால் அவருடைய மருமகன், பட்டயக் கணக்காளர் திரு. மு. சண்முகரத்தினம்மலரைப்பெற்றுச் சிறப்பித்தார்கள். யாழ். பல்கலைக்கழகம் இந்து நாகரீக பீட விரிவுரையாளர் கலாநிதி பிரம்மஸ்ரீ பி. கோபாலகிஷ்ண ஐயர் ஆசியுரை வழங்கினார்கள். கலாவிநோதன் நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி குழுவினர்)மகிஷனை வதைத்த மனோன்மணி' என்ற பொருளில் வில்லிசை விருந்தளித்தார்கள். விழா மிகவும் சிறப்பாக இரவு 9 மணி வரை இனிது நிறைவேறியது,

ஓர் அன்பர்

விசேட சேவை அலுவலர்:

## முல்லைத்தீவு ஐ. தே. க. ஆதரவாளர் எதிர்ப்பு!

(துணுக்காய்)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஐ தே. கட்சி அமைப்பாளர்களின் சிபார்சின் பேரில் விசேட சேவை அலுவலர் நியமனம் இடம்பெற்றுள்ளது. அதேபோல் முல்லைத்தீவு மாவட்ட விசேட சேவை அலுவலர் தெரிவுக்கு முல்லைத்தீவு மாவட்ட மேற்கு புறபான துணுக்காய் பாண்டியன்குளம் இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த ஒருவர் கூட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை

இதற்குரிய நேர் முகப் பரீட்சை முல்லைத்தீவு கச்சேரியில் சென்ற வாரம் நடைபெற்றது. இந்த நேர்முகப்பரீட்சைக்கு முற்றிலும் நகர்புற ஐ. தே. கட்சி ஆதரவாளர்களே அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன் விளைவாக பின்தங்கிய பகுதி மாவட்டத்தின் மேற்குப்புற விண்ணப்பதாரிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதை பல வாலிபர்கள் தெரிவித்தனர்.

இதனால் இப்பகுதி ஐ தே. கட்சி ஆதரவாளர்கள பெரும் எதிர்ப்பை தெரிவித்ததுடன் ஐ தே கட்சி அமைப்பாளர் திரு ஆ. மா. பூபாலசிங்கம் முல்லை மாவட்ட அமைச்சரையும் திட்ட அமுலாக்கல்அமைச்சின் செயலாளருடன் தந்தி மூலம் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

பேசாலை ஐஸ் உற்பத்தி:

## பலமாதங்களின் பின் இயங்க ஆரம்பித்தது

(மன்னார்)

பேசாலை மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் ஒன்றரை கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு கடல் தொழில் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்ட ஐஸ்உற்பத்திச்சாலை பலமாதங்களின்பின் தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது. இப்புதிய ஐஸ் உற்பத்திச் சாலையை இயங்க வைப்பதால் அதிக செலவு ஏற்படுவதாலேயே இதுவரை காலமும் இயங்கவில்லை.

இது சம்பந்தமாக கடந்த மாதம் கொழும்பிலிருந்துவந்த இரு பொறியியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் பயனாக பேசாலை மீன்பிடி கூட்டுத்தாபன ஐஸ் உற்பத்திச்சாலை இயங்க ஆரம்பித்துள்ளது.

## 5 மீனவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இயந்திர வள்ளத்தில் மீன் பிடிக்கச் சென்ற ஐந்து மீனவரைக் காணவில்லை என்று பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்த அன்ரன், ராதா, ராஜன், சண்முகம், செயின் ஆகிய ஐவரும் கடந்த திங்கட்கிழமை காலை குருநகர்ஜெட்டியிலிருந்து மீன் பிடிக்கச் சென்றனராம்.




தேசிய
வழியில்
ஆயுள்
காப்புறுதி செய்யுங்கள்
புதிய ஆயுட் திட்டங்கள் ■ சகாய தவணைக் கட்டணங்கள்
தேசியம்... காப்புறுதியில் ஒரு புதிய அனுபவம்
NATIONAL INSURANCE CORPORATION
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
ஆயுட் காப்புறுதிப் பிரிவு
ஈ. எச். குறே கட்டிடம், 411, காலி வீதி, கொழும்பு 3
தொலைபேசி: 548436.
Almeida Associates
வர்த்தக, கப்பற்றுறை அமைச்சு

# யாழ். மாவட்ட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியிலேயே கூடுதலான [9,822] வாக்குகள் கிடைத்துள்ளன. தபால் வாக்களிப்பிலும் திரு. குமார் பொன்னம்பலத்திற்கே கூடுதலான [1598] வாக்குகள் கிடைத்தள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள பதினொரு தொகுதிகளின் வாக்கு விபரம்:-

### வட்டுக்கோட்டை

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 3,700 |
| ஹெக்டர் கொப்பேகடுவா [சு. க.] | 7,770 |
| குமார் பொன்னம்பலம் [த. கா.] | 9,741 |
| வாசுதேவ நாணயக்கார [ந. ச.] | 254 |
| கொல்வின் ஆர் டி. சில்வா [ ச. க.] | 257 |
| ரூேகண விஜேவீரா [ம. வி. மு.] | 380 |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 6,490 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க.] | 3,758 |
| குமார் பொன்னம்பலம் [த. கா. ] | 9,319 |
| வாசுதேவ நாணயக்காரா [ந. ச. ] | 196 |
| கொல்வின் ஆர். டி. சில்வா ( ச. க.] | 134 |
| ரோ ண விஜேவீரா ம. வி. மு.] | 176 |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| ஜே ஆர் ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 4,065 |
| ஹெச்டர் கொப்பேகடுவா (சு க.] | 3,392 |
| குமார் பொன்னம்பலம் (த. கா. ] | 8,353 |
| வாசுதேவ நாணயக்காரா [ந. ச.] | 98 |
| கொல்வின் ஆர். டி சில்வா [ ச. க.] | 157 |
| ரோகண விஜேவீரா [ம. வி. மு.] | 119 |

### கோப்பாய்

| | |
|---|---|
| ஜே ஆர் ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 3,546 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க.] | 13,768 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.] | 4,98 |
| வாசுதேவ நாணயக்கார [ந. ச.] | 182 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க.] | 423 |
| ரோகண விஜேவீரா [ம. வி. மு.] | 379 |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3629 |
| ஹெக்டர் கொப்பேசடுவ (சு க.] | 6127 |
| குமார் பொன்னம்பலம் (த, கா.) | 9742 |
| வாசுதேவநாணயக்கார (ந. ச.) | 125 |
| கொல்வின் ஆர். டி' சில்வா (ச. க. ) | 419 |
| ரோகணவிஜயவீரா (ம. வி. மு.) | 204 |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3199 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.) | 6343 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 5367 |
| வாசுதேவநாணயக்கார (ந. ச.) | 181 |
| கொல்வின் ஆர். டி. சில்வா (ச. ச) | 150 |
| ரோகணவிஜயவீரா (ம.வி. மு.) | 217 |

### கிளிநொச்சி

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3616 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (சு.க.) | 4188 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 9822 |
| வாசுதேவநாயக்கார (ந. ச.) | 102 |
| கொல்வின் ஆர். டி. சில்வா (ச. க.) | 171 |
| ரோகண விஜயவீரா (ம. வி. மு.) | 188 |

### காங்கேசன்துறை

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3771 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.) | 9523 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 6065 |
| வாசுதேவநாணயக்கார (ந. ச.) | 184 |
| கொல்வின் ஆர். டி. சில்வா (ந. ச.) | 310 |
| ரோகணவிஜயவீரா [ம. வி. மு.) | 341 |

### மானிப்பாய்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜயவர்த்தன (ஐ. தே. க.) | 4488 |
| ஹெக்டர் கொப்பேகடு (சு. க.) | 9008 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 7514 |
| வாசுதேவ நாணயக்காரா (ந. ச.) | 298 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க.] | 483 |
| ரோகண விஜயவீரா (ம. வி. மு.] | 559 |

### நல்லூர்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 4831 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க ] | 4330 |
| குமார் பொன்னம்பலம் [த. கா.] | 8979 |
| வாசுதேவ நாணயக்காரா [ந ச.] | 243 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க.] | 332 |
| ரோகண விஜயவீரா [ம. வி. மு ] | 244 |

### உடுப்பிட்டி

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 2282 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு க.] | 8155 |
| குமார் பொன்னம்பலம் [த. கா. | 5179 |
| வாசுதேவ நாணயக்கார [ந. ச ] | 224 |
| கொல்வின் ஆர் டி. சில்வா [ச. க.] | 353 |
| ரோகண விஜயவீரா [ம. வி. மு.] | 208 |

### தபால் வாக்குகள்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.[ | 1253 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க ] | 1431 |
| குமார் பொன்னம்பலம் [த. கா,] | 1593 |
| வாசுதேவ நாணயக்காரா [ந. ச.] | 127 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க.] | 120 |
| ரோகண விஜயவீரா [ம வி. மு.] | 111 |

# மாவட்ட ரீதியில்...

(1ம் பக்கத் தொடாச்சி)

### திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 45,522 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 31,700 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 635 |
| வாசுதேவ நாணயக்காரா | 276 |
| ரோகணவிஜயவீரா | 5395 |
| குமார் பொன்னம்பலம் | 10 068 |
| மொத்தவாக்குகள் | 1336 5 |
| செல்லுபடியானவை | 93 596 |
| கழிவு | 1795 |

### மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 48094 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 21,88 |
| கொல்வின் ஆர், டி. சில்வா | 1294 |
| வாசுதேவநாணயக்கார | 618 |
| ரோகண விஜயவீரா | 1287 |
| குமார் பொன்னம்பலம் | 47,095 |
| மொத்த வாக்குகள் | 1,72480 |
| செல்லுபடியானவை | 1,20,076 |
| கழிவு | 2879 |

### மாத்தறை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 1,64,725 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 1,44,587 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 1571 |
| வாசுதேவ நாணயக்கார | 509 |
| ரோகண விஜயவீரா | 22,117 |
| குமார் பொன்னம்பலம் | 474 |
| மொத்தவாக்குகள் | 399 8 |
| செல்லுபடியானவை | 3,33,983 |
| கழிவு | 3091 |

### யாழ்ப்பாண மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 47,780 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 77,300 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 3,376 |
| வாசுதேவ நாணயக்கார | 2,186 |
| ரோகண விஜேவீரா | 3,098 |
| குமார் பொன்னம்பலம் | 87,2 3 |
| மொத்த வாக்குகள் | 4,93,705 |
| செல்லுபடியானவை | 2,18,003 |
| கழிவு | 10,610 |

### வன்னி மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 32,834 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 23,221 |
| கொல்வின் ஆர் டி. சில்வா | 584 |
| வாசுதேவா நாணயகாரா | 293 |
| ரோகண விஜயவீரா | 2286 |
| குமார் பொன்னம்பலம் | 11,521 |
| மொத்த வாக்கு | 1,19,092 |
| சொல்லுபடியானவை | 70,739 |
| கழிவு | 2447 |

### பொலன்நறுவ மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 59 414 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 37,243 |
| கொல்வின் ஆர். டி' சில்வா | 451 |
| வாசுதேவா நாணயக்காரா | 141 |
| ரோகண விஜயவீரா | 8,138 |
| குமார் பொன்னம்பலம் | 228 |
| மொத்த வாக்கு | 1,27,624 |
| செல்லுபடியானவை | 1,05,614 |
| கழிவு | 1,065 |

### புத்தளம் மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெவவர்த்தன | 1,28,877 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 80,006 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 1040 |
| வாசுதேவா நாணயகாரா | 239 |
| ரோகண விஜயவீரா | 7001 |
| குமார் பொன்னம்பலம் | 817 |
| மொத்த வாக்கு | 2,67,675 |
| செல்லுபடியானவை | 2,17,980 |
| கழிவு | 1,085 |

### அனுராதபுரம் மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 1,17,873 |
| ஹெக்டர் சொப்பேகடுவ | 1,02,973 |
| கொல்வின் ஆர். டி சில்வா | 1,148 |
| வாசுதேவ நாணயக்கார | 396 |
| ரோகண விஜயவீரா | 13,911 |
| குமார் பொன்னம்பலம் | 222 |
| மொத்த வாக்குகள் | 2 78.594 |
| செல்லுபடியானவை | 2,36,523 |
| கழிவு | 2,294 |

## கந்தபுராண மாநாடு

(யாழ்ப்பாணம்)

கந்தபுராணச் சிறப்புமாநாடு இம்மாதம் 30, 31-ந் திகதிகளில் கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் மண்டபத்தில் நடைபெறும். கீரிமலை சிவநெறிக்கழகத்தால் நடாத்தப்படும். மாநாட்டு நிகழ்சிகளுக்கு பண்டிதர் இ. நமசிவாயம் தலைமை தாங்குகின்றார்.

(உ)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 5-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(22—10—82)

மேடம்: புதிய பாதையொன்று உங்களை எதிர்நோக்கியுளது. நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம் புத்திர வழியால் மனதிற்குதிருப்தியும் ஏற்படும்.

இடபம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள் இன்று அமைதியே நன்று.

மிதுனம்: பொன்னான சந்தர்ப்பம் ஒன்று உங்களைப் பூரிக்கச் செய்யும். தேடிய உறவு முறைகள் நாடியே வரலாம். இளம் பருவத்தினருக்கு இன்று இன்பப் பூங்கா பறந்து வரும்.

கடகம்: தொல்லைகள் தலை தூக்கும். தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு. அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும.

சிங்கம்: நீண்டநாள் கனவு இன்று நினைவாகும் பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும். இன்று புண்ணிய விருப்பும் மேலிடும். சுப தினம்.

கன்னி: தொழில் துறையில் வெற்றி. விருந்தினர்கள் வருகை வேடிக்கையாக இருக்கும். இதயப் படுதாவில் இந்பத்தின் மின்னல்.

துலாம்: இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் கிடைக்கலாம். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

விருச்சிகம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

தனு: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். உடல் நலமும் பாதிக்கப்படலாம். அவசர போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்த்துக்கொள்ளவும்.

மகரம்: இதயம் இன்பத்தால் விம்மும். இல்லத்தில் இனிமை தழுவும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்கும் இன்று வளரும்.

கும்பம்; அவசரகோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்தி தென்படும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு.

மீனம்: அறவளிகளை மனம் நாடும். பொது விவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட்செல்வாக்கும் வளரும் சுற்றாடலில் மதிப்பும் உயரும் இன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மட்டக்களப்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| கொல்வின் ஆர். டி. சில்வா | 21 |
| வாசுதேவ நாணக்கார | 04 |
| ரோகண விஜேவீரா | 34 |

### பட்டிருப்பு தொகுதி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 7,129 |
| ஹெக்டர் ஹொப்பேகடுவ | 3,484 |
| குமார் பொன்னம்பலம் | 21,913 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 531 |
| வாசுதேவ நாணயக்கார | 229 |
| ரோகண விஜேயவீர | 415 |

### கற்குடாதொகுதி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 15 950 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 7,9[illegible]3 |
| குமார் பொன்னம்பலம் | 5,[illegible]51 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 304 |
| வாதேவ நாணயக்கார | 258 |
| ரோகண விஜேயவீர | 155. |

# ட்ராக்டர் விபத்தில் பெண் பலி!

(யாழ்ப்பாணம்)

ட்ராக்டர் விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த தங்கராசா இராசம்மா 58 வயது) என்பவரே இவ்வாறு மாணமானவராவார்.

இவர் நேற்று முன்தினம் வயலுக்குச் சென்றுவிட்டு வீடு திருப்பிக் கொண்டிருக்கும் பொழுது ட்ரக்டர் விபத்துக்குள்ளாகி, முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்ததும் மரணமானார்

ட்ராக்டர் சாரதி பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (மா)

# சம்பத்திரிசியார் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் சம்பத்திரிசியார்கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை சென்ற் அன்ரனிஸ் கல்லூரிக்கும் இடைல் நடைபெற்ற 2ம், 3ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டிகளில் சம்பத்திரிசியார்கல்லூரிமுறையே 9-0, 1-0 என்ற கோல்களால் வெற்றி பெற்றது.

# இணக்கசபை

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் கிராமோதய சபை பிரிவில் மக்களிடையே ஏற்படும் சிறு பிரச்சனைகளை சமாதான முறையில் தீர்த்து வைக்கவும், அமைதியை நிலைநாட்டவும் இணக்கசபையொன்று கிராமோதய சபையினால் அமைக்கபட்டுள்ளது.

கிராமோதய சபைத்தலைவர் சட்டத்தரணி இ. இராசேந்திரம், திரு. பொ. செல்வரத்தினம், திரு. சி. இராமதிலகம், திரு. ச. அ ஐயாத்துரை, திரு செ. அப்புத்துரை ஆகியோர் இந்த இணக்க சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
(பாடியார்- அடி பிள்ளை பாரதர ஜா, பாலசந்தர் படங்கள் எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சுபோட்டார் பாக்கியராஜ்.
தங்கம்மா- அர்மான் அதில் முக்கியம் என்ன தெரியுமா சுட்டிப்பயல் நடிப்பு ஏ ஒன்.
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

மனோகரா [யாழ் நகர்]
தினசரி காட்சிகள்
21-25வரை
நாகேஸ்வரராவ்-பானுமதி
கானல் நீர்

ராணி (யாழ் நகர்)
24-10-82வரை மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-லக்ஷ்மி-முத்துராமன்-சிவகுமார்
ராஜராஜசோழன் (கலர் சினிமாஸ்கோப்)
25-10-82 முதல் பெண் தெய்வம்

சில தினங்கள் மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
ராஜபார்வை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனு
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு விசேட ஒழுங்குசெய்து தரப்படும்

வின்ஸர் (யாழ். நகர்) குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும் 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

ரீகல் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30
6-30, 9-30
ரஜனிகாந்த்-ரதி
முரட்டுக்காளை
[கலர்]

சாந்தி [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஷா நவாஸ் - சுமதி
பாதைமாறிய பருவங்கள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
Daily 10-30, 2-15, 6-00, 9-30.
A BRIDGE TOO FAR
(War Film)
25-10-82 முதல் நெஞ்சில் ஓர் ஆலயம்

# டாக்டரைத் தாக்கி ரூ.25,000 நகைகள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

தனியார் ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவரின் விடுதிக்குள் புகுந்த கொள்ளைக்கோஷ்டி பயங்கர ஆயுதங்களினால் டாக்டரை தாக்கிவிட்டு சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது

வல்லை கூட்டுறவு ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் என். மூத்ததம்பி என்பவரே பயங்கர ஆயுதங்களின் தாக்குதலுக்குள்ளானவராவர்.

இவரின் தலை, கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு இக்கொள்ளையும் தாக்குதலும் நடைபெற்றது.

இருவர் வாள், கத்தி, கோடரி ஆயுதங்களுடன் டாக்டர் இருந்த விடுதிக்குள் புகுந்து பயமுறுத்தியதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர், [மா]

# ''கிராமிய மட்டத்தில் விளையாட்டு வீரர்களை உருவாக்கவேண்டும்''

[வவனியா]

'பாடசாலைமூலமே சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கமுடியும். போட்டிகளில் வெற்றிபெறுவது நோக்கம் அல்ல. பங்குபற்றுவதே மிக முக்கியம்.'

வவனியா நகர சபைத் தலைவர் திரு. . ஐகேதீஸ்வரன் வவனியாவில் நடைபெற்ற பாடசாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வீரர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இப்படிப்பட்ட விளையாட்டுப் போட்டிகளை மூன்று மாதத்துக்கு ஒரு தடவை நடத்தப்படவுள்ளது என்றும் நகரசபைத் தலைவர் கூறினர்

கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் வவனியா மாவட்டப் பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டப்போட்டிகள் கடந்தவாரம் முடிவடைந்தது. உதைபந்தாட்டப் போட்டியில் வவனியா தமிழ் மகாவித்தியாலயம் வெற்றியீட்டியது

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் வலைபந்தாட்டப்போட்டியில் தெரிவு செய்யப்பட்டது.

வவனியா மாவட்டத்தில்முதற்தடவையாக கிராமிய மட்டத்தில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் நோக்கமாகவே இந்தப்போட்டிகள் நடத்தப்பட்டதாக விளையாட்டு அதிகாரி திரு. ஏ. எஸ். குணரத்தினம் தெரிவித்தார்.

# 'நீண்டகாலம் உயிர்வாழ சத்துணவு அவசியம்''

[துணுக்காய்]

ஒவ்வொரு குடும்பத்திலுள்ள அனைவரும் சத்துணவுகளை உண்டு வந்தால் தான் நாம் நீண்டகாலம் உயிர்வாழலாம். உலகில் கோடிக்கணக்கான குழந்தைகள் சத்துணவின்றி மடிகின்றன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்த அளவில் எவ்வளவோ சத்துணவு இருந்தும் நாம் அவற்றைப் போசிக்காமல் ஆடம்பர உணவுகளை உண்டு எமது உடல் பலத்தையும் தேக ஆரோக்கியத்தையும்குறைத்து வருவது எமது கவலையீனமாகும் எனவே ஒவ்வொருவரும் சத்துணவை உட்கொண்டு வாழவேண்டுமென துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரா தெரிவித்தார்.

துணுக்காய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற சத்துணவு திட்ட கருத்தரங்கு பாடசாலை அதிபர் திரு து. செல்வராசா தலைமையில் நடைபெற்றது. பாடசாலை சிறுவர்களால் மண், ஓலை, மரம், கடுதாசி, சேலைதுண்டு ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருட்காட்சியை உதவி அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைத்ததுடன் சத்துணவு திட்டக்கருததரங்கையும் ஆரம்பித்துவைத்தார். (க)

# டிறிபேர்க் கல்லூரி வெற்றி பெற்றது

(மட்டுவில்)

சாவகச்சேரி கல்விவட்டார கல்வி மூலவள நிலையம் நடத்திய கிளித்தட்டுச் சுற்றுப் போட்டியில் 15 - 17 வயது மாணவர்களின் போட்டிகளின் இரண்டு முதற்பரிசுகளையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

கற்றலும் அபிவிருத்திக்குமான கல்வி மூலவளநிலையம் சாவகச்சேரி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான இந்த கிளித்தட்டுச் சுற்றுப் போட்டிகளை நடத்தியது.

இந்தச் சுற்றுப் போட்டிகள் கொடிகாமம் மகாவித்தியாலயத்திலும் கைதடி மகா வித்தியாலயத்திலும் இறுதிப் போட்டி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெற்றன.

17 வயது மாணவர்களுக்கான போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முதலாவது இடத்தையும கைதடி மகா வித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் மூன்றுவது இடத்தையும் 15 வயது மாணவர்களின் போட்டியிலும் இதே பாடசாலைகளே பரிசில்களைப் பெற்றன.

13 வயது மாணவர்களின் போட்டியில் கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம் முதலாம் இடத்தையும் கல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இரண்டாவது இடத்தையும் மீசாலை விக்னேஸ்வரா மூன்றும் இடத்தையும் பெற்றன. தெ ழில திடர் திரு. க கனகராசா பரிசில்களை வழங்கினர்.

# மினிபஸ்ஸை இழுத்து சாதனை

[கிளிநொச்சி]

பலசாதனை முயற்சிகளை மேற்கொண்டு அதில வெற்றி பெற்ற கிளிநொச்சியைச்சேர்ந்த திரு. கே. என் ராஜன் அண்மையில் சாவகச்சேரியில் நடைபெற்ற லயன்ஸ் கழக களியாட்ட விழவின் போது மேலும் இரு சாதனைகளை நிலைநாட்டி அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார். சாவகச்சேரி நவீன சந்தையில் இருந்து 2½ தொன் எடையுள்ள மினிபஸ் ஒன்றை முதுகில் செடில் குத்தி மகளிர் கல்லூரி வரை கட்டியிழுத்துச்சென்று அதே பஸ்ஸை மகளிர் கல்லூரி விளையாட்டரங்கைச் சுற்றி முதுகில் கட்டி இழுத்து சாதனைகளைச் செய்தார்

கிளிநொச்சியில்நடைபெற்ற வைபவம் ஒன்றில் முன்னர் பாரியஎடைகூடிய பஸ் ஒன்றை 2 மைல்களுக்கு மேல் கட்டி இழுத்துச்சென்று சாதனையானை நிலைநிறுத்தினர். அரை ஏக்கர் நிலத்தை இரும்புக் கலப்பைகொண்டு உழுதும் சாதனை செய்தார்.

நூற்றுக்கணக்கான கூரிய ஆணிகளுக்கு மேல் நின்றும் சாதனை புரிந்தார்.


இலங்கை வேந்தன்
அன்பளிப்பு:
வீனஸ் றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
T. V ஏரியல் பொருத்துபவர்களும்
வீடியோ படப்பிடிப்பாளர்களும்
யாழ்ப்பாணம்.

# மாவட்ட ரீதியில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

## பதுளை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 1,41.062 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 88,462 |
| கொலவின் ஆர் டி. சில்வா | 2115 |
| வாசுதேவ நாணயக்காரா | 463 |
| ரோகண விஜயவீரா | 7713 |
| குமார் பொன்னம்பலம் | 625 |
| மொத்தவாக்கு | 2,80,187 |
| செல்லுபடியான வாக்குகள் | 2,40,440 |
| கழிவு | 2982 |

## மாத்தளை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 94,031 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 59,299 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 866 |
| வசுதேவா நாணயகாரா | 196 |
| ரோகண விஜயவீரா | 7169 |
| குமார் பொன்னம்பலம் | 253 |
| மொத்த வாக்கு | 1,87,276 |
| செல்லுபடியானது | 1,61,814 |
| கழிவு | 1414 |

## திகாமதுல்ல மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 90,772 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 53,096 |
| கொல்வின் ஆர் டி. சில்வா | 967 |
| வாசுதேவ நாணயக்கார | 377 |
| ரோகண விஜய வீர | 7,679 |
| குமார் பொன்னம்பலம் | 8,079 |
| மொத்தவாக்கு | 1,63'071 |
| செல்லுபடி | 1,60,970 |
| கழிவு | 2,101 |

## கொழும்பு மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 4,36.290 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 2,76,476 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 9.655 |
| வாசுதேவ நாணயக்காரா | 2,008 |
| ரோகண விஜயவீரா | 28,580 |
| குமார் பொன்னம்பலம் | 3,022 |
| மொத்தவாக்கு | 7,64,021 |
| செல்லுபடி | 7,56,031 |
| கழிவு | 7,990 |

## அம்பாந்தோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன (ஐ தே. க.) | 90,545 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [ஸ்ரீ. ல சு.க.] | 76,402 |
| கொல்வின் ஆர்.டி. சில்வா [ல.ச.ச. | 87 |
| வாசுதேவா நாணயக்கார [ந.ச.ச. க.] | 344 |
| ரோகண விஜேவீரா [ஜே வி. பி.] | 28,835 |
| குமார் பொன்னம்பலம் (தமிழ் காங்கிரஸ்] | 275 |
| மொத்தவாக்குகள் | 1,99,082 |
| செல்லுபடியானவை | 1,97,278 |
| கழிவு | 1804 |

## நுவரெலியா மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 1.09,017 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (ஸ்ரீ.ல.சு.க.) | 57,093 |
| கொல்வின் ஆர். டி. சில்வா (ல ச ச.க.) | 1,201 |
| வாசுதேவ நாணயக்கார (ந.ச.ச.க.] | 331 |
| ரோகண விஜயவீர (ஜே.வி பி.) | 3,56 |
| குமார் பொன்னம்பலம் (தமிழ்காங்கிரஸ்) | 558 |
| மொத்தவாக்கு | 1,74,817 |
| செல்லுபடியானவை | 1,72,769 |
| கழிவு | 2,048 |

## கேகாலை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 1,95,444 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 1,26,538 |
| கொல்வின் ஆ டி. சில்வா | 6,184 |
| வாசுதேவ நாணயக்காரா | 514 |
| ரோகண விஜயவீரா | 13,706 |
| குமார் பொன்னம்பலம் | 376 |
| மொத்த வாக்கு | 3,47,299 |
| செல்லுபடியானது | 3,42,7 2 |
| கழிவு | 4,537 |

## கண்டி மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 2,89,621 |
| ஹெக்டர் கொபபேகடுவ | 1,78 647 |
| கொலவின் ஆர். டி. சிலவா | 2.256 |
| வாசுதேவ நாணக்காரா | 718 |
| ரோகண விஜயவீரா | 12,493 |
| குமார் பொன்னம்பலம் | 562 |
| மொத்தவாக்கு | 4 88,845 |
| செல்லுபடியானது | 4,84 297 |
| கழிவு | 4,548 |

## காலி மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 2,11,544 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 1,80,926 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 6,391 |
| வாசுவேவ நாணயக்காரா | 891 |
| ரோகண விஜயவீரா | 20,962 |
| குமார் பொானனம்பலம் | 425 |
| மொத்த வாக்கு | 4,26,336 |
| செல்லுபடி | 4,21,138 |
| கழிவு | 5,198 |

## களுத்துறை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 2,11,592 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 1,85,874 |
| கொல்வின் ஆர். டி சில்வா | 8.613 |
| வாசுதே நாணயக்கார | 871 |
| ரோகண விஜயவீரா | 14,499 |
| குமார் பொன்னம்பலம் | 443 |
| மொத்த வாக்கு | 4,27,182 |
| செல்லுபடி | 4,21,892 |
| கழிவு | ,290 |

## இரத்தினபுரிமாவட்டம்

| | |
|---|---|
| ஜே, ஆர், ஜெயவர்த்தன | 1,75,903 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 1,52,506 |
| டாக்டர் கொல்வின் ஆர், டி, சில்வா | 1996 |
| வாசுதேவ நாணயக்கார | 3,494 |
| ரோகணவிஜேவீரா | 11,283 |
| குமார் பொன்னம்பலம் | 422 |
| மொத்த வாக்குகள் | 3 49.011 |
| செல்லுபடி | 3,45,604 |
| கழிவு | 3,407 |

## குருநாகல் மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 3,45,769 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 2,48,479 |
| டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா | 2,594 |
| வாசுதேவ நாணயக்கார | 792 |
| ரோகண விஜேவீர | 21,835 |
| குமார் பொன்னம்பலம் | 509 |
| மொத்த வாக்கு | 6,25,409 |
| செல்லுபடி | 6,19,978 |
| கழிவு | 5431 |

(6ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துக்குமாரசாமி சிவபாக்கியம்

கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி மு. சிவபாக்கியம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கந்தர் மணியகாரரின் மகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைச்சாமி, பொன்னுச்சாமி ஆகியோரின் சகோதரியும், திருமதி சிவயோகம், திருமதி புவனேஸ்வரி, ஆனந்தராசா, திருமதி சிவஞானவல்லி, ஆறுமுகம் (கமநதொழில் வெளிக்கள உத்தியோகத்தர். கச்சேரி) திருமதி யோ. இராசசிங்கம் (ஆசிரியை, துரையப்பா வித்தியாசாலை) ஆகியோரின் தாயாரும், இராசரத்தினம் (இளைப்பாறிய P W D ஓவசியர்), யோகசுந்தரம் (இளைப்பாறிய R. D. O.), சிவஞானம் (இளைப்பாறிய S. M.), இராசசிங்கம் இளைபாறிய உப தபாலதிபர்), திருமதி சிதம்பரம் ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் கந்தர்மணியம் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து சனிக்கிழமை 23-10-82) காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைக்காக தண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (4910.)

## மட்டக்களப்பில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு

தொகுதி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 24, 220 |
| ஹெக்டர் கொப்கேடுவ | 9,924 |
| குமார் பொன்னம்பலம் | 19,342 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 438 |
| வசுதேவ நாணயக்கார | 127 |
| ரோகண விஜேவீர | 638 |

தபால் மூலம் வாக்களிப்பு

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 795 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 287 |
| குமார் பொன்னம்பலம் | 589 |

[6ம் பக்கம் பார்க]

## ஜயவர்த்தன.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகப்படியான வாக்குகளை பெற்றுள்ளார்.

### 1977 தேர்தலிலும் அதிகம்

கடந்த 1977ம் ஆண்டு பொதுத தேர்தலில் ஐககிய தேசியககட்சி 50.92 சதவீத வாக்குகளே பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன முதல் சுற்றிலேயே வெற்றிபெற்றுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 30ந் திகதி முன்னோடி பரீட்சை

[பண்டத்தரிப்பு]

இலங்கை கிறிஸ்தவ ஆசிரியர் சங்கத்தின் வட பிரதேசக் கிளை யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் க. பொ த. சாதாரண பரீட்சையில் தோற்றவிருக்கும் கத்தோலிக்கரல்லாத மாணவரிடையே கிறிஸ்தவ பாடத்தில் முன்னோடிப் பரீட்சையொன்றை இம் மாதம் 30-ம் திகதி நடாத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவ மாணவர்கள் இந்த முன்னோடிப் பரீட்சையில் தோற்ற விரும்புவதாகவும், பரீட்சையை சிறப்பான முறையில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையின் ஒத்துழைப்புடனும் அனுசரணையுடனும் செய்துள்ளதாகவும் சங்க வடபிராந்திக் கிளையின் செயலாளர் ஆசிரியர் திரு பி. ஈ. தனராஜசிங்கம் இது பற்றி 'ஈழநாடு' பத்திரிகைக்கு தகவல் தருகையில் தெரிவித்தார்.

## பயிற்சி பெறுவார்

[துணுக்காய்]

துணுக்காய் அரசினர் வைத்தியசாலையின் பிரதான வைத்தியர். திரு. தி. தில்லையம்பலம் விசேட பயிற்சியை பெறும் பெருட்டு யாழ். அரசினர் வைத்திய சாலைக்கு சென்றுள்ளார். இவர் அங்கு குடும்பதிட்ட பயிற்சியை விசேடமாக மேற்கொள்வார். [க]

## தார்மீகம்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையை மீண்டும் இங்கு வலியுறுத்தி அக்குறிக் கோளை அடைய உறுதிசெய்கிறேன்''.


✶ மத்தியகிழக்கு, லண்டன்

செல்வோருக்கு

மிகவும் குறைந்த கட்டணத்தில்

GULF AIR டிக்கட்டுகள்

யாழ்ப்பாணத்தில் உடனடியாக

மக்கினொன்ஸ் வழங்குகிறது

எந்த நாட்டிற்கும்

எந்த விமானத்திலும்

மிகக்குறைந்த கட்டணத்தில்

விமான டிக்கட்டுகள்

ஃ (TRAVELLERS CHEQUES)

பிரயாணக் காசோலைகள்

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான

எம்மிடம்

வங்கியில் அறவிடும் அதே

கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

மக்கினொன்ஸ்

ட்றவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

த. பெ. எண் 92, தொலைபேசி: 24154


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.